**Deposition of witness**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the court of Judicial Magistrate No.II,Tindivanam.**

**CASE NO. STC. 334/2024**

**Prosecution witness – DW – 2**

| | | | |
|---|---|---|---|
| Date | 10.04.2026 | Taluka. | |
| Name | வள்ளி | Calling | |
| Father/Husband Name | காளிதாஸ் | Age | 43 |
| Village/City | வேப்பேரி | P.S | |

Complaint and accused present.

**<u>எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>**

1. நான் அரசுத் துறையில் கண்டக்டராக வேலை செய்து வருகிறேன். நான் யாருடைய திருமணத்திற்காக முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல சென்றேன் என்றால் எனது அக்கா மகன் திருமணத்திற்காக சென்றேன். எனது மச்சானை யாரும் கடத்தி வைக்கவில்லை என்றாலும் எனக்கு யாரும் போன் செய்யவில்லை என்றாலும் அந்த சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. காத்தவராயன் கல் எடுத்து வந்து எனது மனைவியை அடிக்க வந்தது தவறு என்றாலும் அவர்கள் நிலம் வாங்குவதற்காக எதிரி வள்ளி இடம் பணம் கொடுத்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. நான் முன்னூர் கிராமத்தில் ஆறு ஏக்கர் நிலம் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை 4 ஏக்கர் 83 சென்ட் தான் வாங்கி உள்ளேன். மேற்படி நிலம் வாங்குவதற்கு முன்பாக எனது

மனைவியுடன் 27.09.2021 தேதியன்று காத்தவராயன் எனது மனைவியுடன் ஒரு கிரைய உடன்படிக்கை போட்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய மனைவி உடையது தான். நான் சொல்வது போல் எனது மனைவியிடம் மிரட்டி வாங்கவில்லை என்றாலும் எங்கள் வீட்டிற்கு வந்து தான் காசோலை வாங்கி சென்றார்கள் என்றாலும் சரியல்ல மிரட்டி தான் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீடு எங்களுடையது தான்.

2. நான் அரசுத் துறையில் வேலை பார்த்துக்கொண்டு ஹிஜாவு என்ற ஏமாற்றும் கம்பெனியுடன் உடன்படிக்கை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் காளிதாஸ் வள்ளி முருகதாஸ் மற்றும் பிரவீன் ராஜ் ஆகியோர் போட்டுக்கொண்ட உடன்படிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். உடன்படிக்கை இல்லை அது நாங்கள் முதலீடு செய்தது சம்பந்தமான ஆவணம் ஆகும். எனது மச்சானை பிடித்து வைத்துக் கொண்டு பணம் கேட்டதாக சொல்வது பொய் என்றாலும் எனது மனைவி தானாக தான் சொல்லிக் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும் எனது மனைவி சம்பவத்தை பற்றி சொன்னார். சங்கர் எந்த பரிவர்த்தனையிலும் ஈடுபடவில்லை என்றாலும் காத்தவராயன் மற்றும் அரசு தான் எனது மனைவிக்கு நிலம் வாங்கிக் கொடுத்தார்கள் என்றாலும் பணம் குறைந்ததற்காக காத்தவராயன் பணம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

3. எனது சொத்தை யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் பத்திரம் மற்றும் பட்டா என் வசம்தான் உள்ளது என்றாலும் நான்தான் நிலத்தை அனுபவம் செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. நிலத்தில் காலை வைத்தால்

வெட்டி விடுவேன் என்று அவர்கள் மிரட்டவில்லை என்றாலும் நான் சொல்வதுபோல் பிரம்மதேசம் காவல் நிலையத்தில் எந்த புகார் கொடுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. எனது தம்பி மற்றும் தம்பி மனைவியை பிடித்து வைத்துக்கொண்டு பணம் கேட்டதாக சொல்வது தவறு என்றாலும் பணம் பெற்றதற்காக தான் எனது மனைவி காசோலை கொடுத்தார் என்றாலும் சரியல்ல. எனது மனைவி அவருடைய முதல் விசாரணையில் காசோலை கொடுத்தது உண்மை என்று ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. நிஜாவு நிறுவனத்தில் பொதுமக்களிடம் இருந்து பணம் பெற்று மோசடி செய்துள்ளது போல இந்த காசோலையையும் எதிரி மோசடி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது மனைவிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்ல.

//திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் மைக் மூலம் சொல்லப்பட்டு கணினியில் பதிவுசெய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண்.2, திண்டிவனம்.